**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 07.08.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

செப்டம்பர் 9ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை, இன்று வெளியிடப் பட்டுள்ளது.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மற்றும், மீனவர்களின் நலன்களை, நாடு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய கைத்தறி தின விழாவில், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் **தேசிய கைத்தறி விருது**களை, வழங்கி சிறப்பித்தார்.

புதுச்சேரியில் நெசவுத் தொழில் செய்பவர்களின் கூலி, இம்மாதம் முதல், 20சதவிகிதம் உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.

--------------------

*துணை ஜனாதிபதி 1 (2)*

தேர்தல் ஆணையம், குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கையை, இன்று வெளியிட்டுள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*துணை ஜனாதிபதி 2 (13)*

**(வாய்ஸ்)**

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிட விரும்புவோர், வரும் 21ஆம் தேதி வரை, வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும், தேர்தல், செப்டம்பர் 9ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. குடியரசுத் துணைத் தலைவர் பதவியில் இருந்து, திரு. ஜெக்தீப் தன்கர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, இத்தேர்தல் அவசியமாகி உள்ளது. மக்களவை, மற்றும், மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலில் வாக்களித்து, புதிய குடியரசுத் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். வரும் 21ஆம் தேதி வரை தாக்கல் செய்யப்படும் மனுக்கள், மறுநாள் 22ஆம் தேதி பரிசீலிக்கப்படும் என்றும், ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள, இம்மாதம் 25ஆம் தேதி வரை, அவகாசம் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. செப்டம்பர் 9ஆம் தேதி, வாக்குப்பதிவு முடிந்தவுடன், வாக்கு எண்ணிக்கை, அன்றைய தினமே மேற்கொள்ளப்படும்.

---------------------

மோடி-சுவாமிநாதன் 1 (17)

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மற்றும், மீனவர்களின் நலன்களை, நாடு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். வேளாண் விஞ்ஞானி எம்.எஸ் சுவாமிநாதன் நூற்றாண்டு விழாவை ஒட்டி, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சர்வதேச கருத்தரங்கின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், விவசாயிகளின் நலன்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும், சாகுபடிச் செலவை குறைத்து, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க, தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாகவும் கூறினார்.

பால், பயறு வகைகள், மற்றும், சணல் உற்பத்தியில், உலக அளவில் முதல் நாடாக இந்தியா திகழ்வதாக, பிரதமர் தெரிவித்தார். கடந்த ஆண்டு இந்தியாவில் உணவு தானிய உற்பத்தி, முன் எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்ததாக அவர் தெரிவித்தார்.

உணவு உற்பத்தியில், சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இயக்கத்தில், டாக்டர் எம்.எஸ் சுவாமிநாதன் ஆற்றிய முக்கிய

பங்களிப்பை, பிரதமர் திரு. நரேநதிர மோடி, தமது உரையில் நினைவு கூர்ந்தார். **உயிரி பன்முகத் தன்மை** என்பதற்கு அப்பாற்பட்டு, **உயிரி இன்பம்** என்னும் புதிய கருத்தை முன் வைத்தவர் டாக்டர் எம்.எஸ் சுவாமி நாதன் என்றும், இதே அடிப்படையில்தான், **உணவுப் பாதுகாப்பு** என்னும்

மோடி-சுவாமிநாதன் 2 (4)

கருத்து தற்போது, **ஊட்டச் சத்து பாதுகாப்பு** என்னும் நிலைக்கு உயர்த்தப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். பருவநிலை ஏற்றத் தாழ்வுகளை தாக்குப் பிடிக்கும் வகையிலான, புதிய பயிர் ரகங்களை, வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

---------------------

*நாடு-கைத்தறி 1 (7)*

11ஆவது தேசிய கைத்தறி தினம், நாட்டில் இன்று கொண்டாடப்படுகிறது. 1905ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 7ஆம் தேதி, வரலாற்று சிறப்புமிக்க சுதேசி இயக்கம் தொடக்கப் பட்டதை குறிக்கும் வகையிலான இந்நாளில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில், **தேசிய கைத்தறி விருது**கள், மற்றும், **கபீர்தாசர் கைத்தறி விருது**களை, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வழங்கி சிறப்பித்தார். விழா குறித்து கூடுதல் விவரங்கள்…..

**(வாய்ஸ்)**

*நாடு-கைத்தறி 2 (12)*

**(வாய்ஸ்)**

வளங்குன்றா அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஜவுளி ரகங்களே, இன்றைய உலகின் தேவை என்றும், இந்தியாவின் கைத்தறித் துறை, இத்தேவையை சிறந்த முறையில் பூர்த்தி செய்து வருவதாகவும், அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், விழாவில் பேசுகையில் கூறினார். இந்தியக் கைத்தறித் துணி ரகங்களை, உலக அளவில் மேலும் பிரபலப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜவுளித் துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரீட்டா இவ்விழாவில் பேசுகையில், நெசவாளர்கள், இ-வர்த்தக தளங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதால், விரிவான சந்தை வாய்ப்புகள், மற்றும், கூடுதல் அதிகாரம் பெறுவதாக கூறினார். புவிக் குறியீடுகள், மற்றும், இண்டியா பிராண்ட் வணிக முத்திரை மூலமாக, மத்திய அரசு இந்தியக் கைத்தறித் துணிகளின் தரத்தை உலக அளவில் உறுதிப்படுத்தி வருவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

---------------------

*ஹர் கர் திரங்கா* (7)

**வீடு தோறும் மூவர்ணக் கொடி** இயக்கத்தின் கீழ், ஜம்மு-காஷ்மீரின் **தோடா** மலை மாவட்டத்தில் உள்ள, அரசுப் பள்ளி மாணவர்கள், மூவாயிரம் ராக்கி **கங்கணக் கயிறு**களை, **கைகளாலே**யே தயாரித்து, **லடாக் பகுதி**யில், சீன எல்லையில் உள்ள இந்திய ராணுவத்தினருக்கு அனுப்பி வைத்துள்ளனர். மாவட்டம் முழுவதிலும், பல்வேறு அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் இதில் ஆர்வமுடன் பங்கேற்று, ஒற்றுமை, மற்றும், தேசிய பெருமிதத்தை வெளிப்படுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

*புதுச்சேரி கைத்தறி (6)*

புதுச்சேரியில் நெசவுத் தொழில் செய்பவர்களின் கூலி, இம்மாதம் முதல், 20சதவிகிதம் உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார். இன்று புதுச்சேரியில், தேசிய கைத்தறி தின விழாவைத் தொடக்கி வைத்து பேசிய அவர், பாரம்பரியமான கைத்தறித் தொழிலை பாதுகாக்கத் தேவையான, எல்லா உதவிகளையும் அரசு வழங்கும் என்றார். முதலமைச்சரின் உரையில் இருந்து ஒருபகுதி.....

**(வாய்ஸ்-ரங்கசாமி)**

---------------------

*புதுச்சேரி கைத்தறி* 2 (13)

புதுச்சேரியில் நடைபெற்ற கைத்தறி தின விழாவின் போது, தட்டாஞ்சாவடி கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின், புதிய வடிவமைப்புடன்

கூடிய துண்டு ரகத்தை முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிமுகப் படுத்தினார். கடந்த ஆண்டு அதிக அளவில் நெசவு செய்து, அதிக கூலி பெற்றவர்களுக்கு, ரொக்கப் பரிசுகளையும், 6 **பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களு**க்கு, 90 சதவிகித மத்திய அரசு மானியத்துடன் கூடிய தறி உபகரணங்களையும் அவர் வழங்கினார். மத்திய அரசின் **சமர்த்** திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் நெசவாளர் சேவை மையத்தின் உதவியுடன், நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டமும், விழாவின் போது தொடக்கி வைக்கப்பட்டது. சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், கூட்டுறவுத் துறைச் செயலர் திரு. ஜெயந்த் குமார் ரே, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. யஷ்வந்த்தையா உள்ளிட்டோர், இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

---------------------

*கருணாநிதி* (14)

தமிழக முன்னாள் முதலமைச்சர் **கருணாநிதி நினைவு நாள்** இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. கடற்கரை சாலை மேரி கட்டட அரங்கில், அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர். சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. அனிபால் கென்னடி, திரு. சம்பத், திரு. செந்தில்குமார் ஆகியோர், மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கவிஞரேறு **வாணிதாசனார் நினைவு நாளும்** இன்று அனுசரிக்கப் படுவதை ஒட்டி, பாரதி பூங்காவில் அமைந்துள்ள **வாணிதாசனார் சிலை**க்கு, முதலமைச்சர், சட்டப் பேரவைத் தலைவர், பொதுப் பணித்துறை அமைச்சர், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---------------------

*பயிர் மானியம் (9)*

காரைக்காலில் கடந்த ஆண்டு எள் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, **ஏக்கருக்கு 5 ஆயிரம் ருபாய் மானியத்**தையும், இந்திய உணவுக் கழகத்திற்கு நெல் விற்பனை செய்த விவசாயிகளுக்கு, கிலோவிற்கு 2 ரூபாய் **தர மேம்பாட்டு உதவி**களையும், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என் திருமுருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, மொத்தம் சுமார் 24 லட்சம் ரூபாய் உதவிகள், 258 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாக, வேளாண் அமைச்சர் அலுவலகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*புதுச்சேரி ஓவர் கோட் (5)*

புதுச்சேரியில், 6 முதல், 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகள் ஓவர்-கோட் அணிய, கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட ஓவர் கோட் **வடிவமைப்பும்**, கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப் படுவதாக, பள்ளி கல்வி இயக்குநரகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

---------------------

*திரைப்பட விழா (13)*

புதுச்சேரியில், அலையான்ஸ் பிரான்சே, **தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்-கலைஞர்கள் சங்கம்**, மற்றும், **புதுச்சேரி திரை இயக்கம்** சார்பில், நாளை முதல் 3 நாட்களுக்கு நடைபெற உள்ள 2ஆவது உலக திரைப்பட விழாவில், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், பிரெஞ்ச், மற்றும் ஸ்பானிய மொழித் திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன. 9 தேசிய விருதுகளை வென்ற, பிரபல திரைப்பட எடிட்டர் ஸ்ரீகர் பிரசாத், திரைப்பட விழாவை தொடக்கி வைக்கிறார். விழாவின் முதல் படமாக **Tori And Lokita பிரெஞ்ச் திரைப்படம்** திரையிடப் படுகிறது. நாளை மறுநாள், Afternoons of Solitude ஸ்பானிய திரைப்படம், **மனிதர்கள்** தமிழ் திரைப்படம் உள்ளிட்ட திரைப்படங்கள் இடம்பெற உள்ளன. 10ஆம் தேதி, **Complete Unknown**

**அமெரிக்க திரைப்படம்** உள்ளிட்ட படங்கள் திரையிடப்படும். புதுச்சேரி திரை இயக்கத்தின் செயலாளர் திருமதி பச்சையம்மாள் உட்பட விழா ஏற்பாட்டாளர்கள், இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தனர்.

---------------------

*வானிலை* (12)

**வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள்** காரணமாக, இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளை கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், கனமழை எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில், 13 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------

*மகளிர்-அன்னபூர்ணா* (15)

மகளிர் திறன் மேம்பாட்டிற்கான **ஐநா மகளிர் அமைப்**பின், **2ஆம் கட்ட She_leads திட்ட**த்தை, இன்று புதுடெல்லியில், மத்திய **மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை** அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தொடக்கி வைத்தார். நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும், பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டம், 2023ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதை தொடர்ந்து, ஐநா மகளிர் அமைப்பின் இந்த 2 நாள் கருத்தரங்கு, **மகளிர் அதிகார மேம்பாட்டி**ல், முக்கிய தருணமாக அமைகிறது. **மகளிர் தலைமை** என்பது, வெறும் **பிரதிநிதித்துவம்** மட்டுமே அல்ல என்றும், **மகளிர்**

**தலைமை** மூலமாகவே, முன்னேறிய, **சுயசார்பு இந்தியா**வை எட்ட முடியும் என்றும், அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். தேர்தல் உட்பட, பொது வாழ்வின் பல்வேறு அம்சங்களில் பெண்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், இதற்கு தேவையான திறன்களை பெண்களுக்கு வழங்கவும், **She_leads திட்டம்** உதவிகரமாக இருக்கும் என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

---------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

செப்டம்பர் 9ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை, இன்று வெளியிடப் பட்டுள்ளது.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மற்றும், மீனவர்களின் நலன்களை, நாடு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய கைத்தறி தின விழாவில், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் **தேசிய கைத்தறி விருது**களை, வழங்கி சிறப்பித்தார்.

புதுச்சேரியில் நெசவுத் தொழில் செய்பவர்களின் கூலி, இம்மாதம் முதல், 20சதவிகிதம் உயர்த்தி வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.